சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 10.10.2025 SC 65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | துரைச்சாமி தேவர் | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | அ.சா.2 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் கூடலூர் 4 வது வார்டு சுக்காங்கல்பட்டியில் குடியிருந்து வருகிறேன். 01.03.2022 ம் தேதி சுமார் இரவு 8.30 மணிக்கு சம்பவம் நடந்தது. சம்பவத்திற்கு முந்தைய நாள் எனது மூத்த பேரனை என் மருமகள் சீனா வீட்டிலிருந்து அழைத்து சென்று விட்டார் என் மகன் சென்று மொட்டை போடுவதற்கு அழைத்ததற்கு அனுப்ப மறுத்துவிட்டார்கள் அதனால் ஏற்பட்ட பிரச்சனையில் மறுநாள் 8.30 மணிக்கு 1 முதல் 7 எதிரிகள் வீட்டிற்கு வந்து 1ம் எதிரி அவர் கையில் வைத்திருந்த சா.பொ.1 அருவாளால் என் மகனின் இடது கையில் வெட்டிவிட்டார் நான் அதை சென்று தடுத்தப்போது என்னையும் எனது இடது கையில் 1ம் எதிரி வெட்டிவிட்டார் அதன் பின்னர் 2ம் எதிரி, 6ம் எதிரி சிங்கம், 7 ம் எதிரி மணவாளன் ஆகியோர்கள் என்னை கீழே தள்ளி கையால் அடித்தும் காலால் மிதித்தார்கள் உடனடியாக என் மகனுக்கு இரத்தம் வந்து கொண்டிருந்ததால் நானும் என் மகனும் கம்பம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு இருந்து எங்களை தேனி க,விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் நாங்கள் மேல் சிகிச்சைக்காக மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.